திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூடுதல் நீதிமன்றம் நியமிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்த நீதிமன்றத்தினுடைய தலைமை ஸ்தாபனம் மதுரைதான். ஆகவே கூடுதல் நீதிமன்றம் நியமிக்கப்பட்டாலும் இந்த அடிப்படையான பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு ஏற்படவில்லை. அதுமட்டுமல்ல, பத்திரிகையிலே கூட படித்தோம். மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு கூட வாகனம் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னதாக. ஆகவே அந்தப் பின்னணியில் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு முன்னாலே இந்தத் தொழில் நீதிமன்ற நீதிபதிகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வாகனம் கொடுப்போமேயானால் நம்முடைய கேஸ்கள் ரொம்ப ஸ்ட்ராங்காகிவிடுகிறது. எனவே அதைக் காண்பித்து தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற முறையில்—எனக்கு அனுபவம் இருக்கின்ற காரணத்தால்—இங்கே இருக்கக்கூடிய பிரைசைடிங் ஆபீசர்களுக்கு வாங்குவதற்கு சுலபமாக இருக்கும். அப்படி அது வந்துவிட்டால் அதையும் வாங்கலாம். ஆனால் இப்போதே, அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மதுரையிலே ஏற்கனவே தொழில் நீதிமன்றம் இருக்கிறது. அதனால் ஆக மதுரையிலே இன்னொன்று போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அதை திருநெல்வேலி போன்ற இடங்களில் இருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள் என்று கருதுகிறேன். இவைகளில் எல்லாம் வழக்குகள் தேங்கிவிடும் என்ற அச்சம் ஏற்படுமானால் அப்பேற்பட்ட யோசனைகளைப் பரிசீலனை செய்யலாம்.

Gunampallam Ajjanahalli Tank in Pennagaram taluk.

* Q No. 200 THIRU T. VENKATA REDDY ; Will the Hon. the Minister for irrigaton be pleased to state—

(a) whether the Government will take up the construction of "Gunampallam Ajjanahalli Tank" in Pennagaram Taluk, Dharmapuri District : and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தருமபுரி மாவட்டம், கூனம்பள்ளத்தின் குறுக்கே மூங்கில்மடுவு கிராமத்தின் அருகில் ஒரு ஏரி அமைப்பதற்கு அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. சில வேலைகளும் நடந்துள்ளன

(ஆ) இத் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

1983 பிப்ரவரி 11]

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே இந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு இந்த திட்டத்தை நிறைவேற்றுகின்ற ஒப்பந்தக்காரர்கள், சரியான முறையில் நிறைவேற்ற முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. எனவேதான் திருத்திய மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் அளித்து உள்ளது. அந்த திட்டம் விரைவாக நடத்தி முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10.00)

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, பெண்ணகரம் வட்டத்தில் கூனம்பள்ளம் அஜ்ஜன ஹள்ளி ஏரியை அமைக்கும் பணியை இந்த ஆண்டு எடுத்துக்கொண்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கான மதிப்பீடு எவ்வளவு? அந்த ஏரியின் கீழ் பாசனம் பெறும் நிலங்கள் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 1970-ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டபோது ரூ. 7.20 லட்சம் என்று முதலில் மதிப்பிடப்பட்டது. பிறகு அது ரூ. 20.50 லட்சம் என்கிற அளவிற்கு மாற்றப்பட்டு, இப்போது ரூ. 26 லட்சம் என்று திருத்திய மதிப்பீட்டை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது.

மேற்கு நோக்கிப்பாயும் நதிகளின் நீரைப்பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட 'கமிஷன்'

* வினா என் 201—திரு. ப. நெடுமாறன் ; மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேற்கு நோக்கிப்பாயும் நதிகளின் நீரைப்பயன்படுத்துவது சம்பந்தமாக மத்திய கமிஷன் ஏதேனும் அமைக்கப்பட்டதா?

(ஆ) அந்த கமிஷன் அளித்துள்ள பரிந்துரைகள் என்ன?

(இ) இது சம்பந்தமாக தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?